# பன்னிரெண்டாம் வகுப்பு

## கணக்குப்பதிவியல் ---- ஒரு மதிப்பெண் வினா- விடை

1. நிகர இலாபம், இலாப நட்டக் கணக்கிலிருந்து முதல் கணக்கிற்கு மாற்றப்படுகிறது.
2. முதல் மீது வட்டி இலாப நட்டக் கணக்கில் பற்று வைக்கப்படும்.
3. எடுப்பு மீது வட்டி முதல் கணக்கில் பற்று வைக்கப்படும்.
4. கொடுபட வேண்டிய செலவுகள் இருப்பு நிலை குறிப்பின் பொறுப்புகள் பக்கத்தில் தோன்றும்.
5. முன் கூட்டி செலுத்திய செலவுகள் இருப்பு நிலை குறிப்பின் சொத்துகள் பக்கத்தில் தோன்றும்.
6. முன் கூட்டி பெற்ற வருமானம் இருப்பு நிலை குறிப்பின் பொறுப்புகள் பக்கத்தில் தோன்றும்.
7. அடக்கவிலை அல்லது சந்தை விலை,இதில் எது குறைவோ, அந்த விலையில் இறுதி சரக்கிருப்பு மதிப்பிடப்படும்.
8. இருப்புநிலைக் குறிப்பில் தேய்மானம் குறிப்பிட்ட நிலைச் சொத்திலிருந்து கழித்து காட்டுதல் வேண்டும்.
9. இருப்புநிலைக் குறிப்பில் வாரா ஐயக்கடன் ஒதுக்கு பற்பல கடனாளிகளிடமிருந்து கழித்து காட்டுதல் வேண்டும்.
10. உள் திருப்பம் கழிக்கப்படுவது------விற்பனையிலிருந்து.
11. கொடுபடவேண்டிய வாடகை ஒரு-------- பொறுப்பு.
12. இறுதிச்சரக்கிருப்பு தோன்றுவது-----------வியாபாரக் கணக்கு மற்றும் இருப்பு நிலைக் குறிப்பு.
13. தொடக்கச்சரக்கிருப்பு தோன்றுவது------வியாபாரக் கணக்கில்.
14. முதல் மீது வட்டி கூட்டப்படுவது----------முதலுடன்.
15. எடுப்பு மீது வட்டி கழிக்கப்படுவது--------முதலிலிருந்து.
16. இறுதி கணக்குகள் தயார் செய்யப்படுகையில் ,சரிக்கட்டுதலில் தரப்படும் அனைத்து இனங்களும் இரு இடங்களில் தோன்றும்.
17. கூடியுள்ள வட்டி / வருமானம் சொத்து ஆகும்.
18. மொத்த இலாபம் மாற்றப்படும் கணக்கு-------இலாப நட்ட கணக்கு.
19. இலாப நட்ட கணக்கு வெளிப்படுத்துவது--------நிகர இலாபம் அல்லது நிகர நட்டம்.
20. இரட்டைப் பதிவு முறை பின்பற்றப்படாமல் பராமரிக்கப்படும் ஏடுகள் முழுமைபெறா பதிவேடுகள் எனப்படும்.
21. நிலை அறிக்கைமுறை நிகர மதிப்பு முறை எனவும் அழைக்கப்படுகின்றது.
22. இறுதி முதலை அறிவதற்கு, ஆண்டு இறுதியில் நிலை அறிக்கை தயாரிக்கப்பட வேண்டும்.
23. ஆண்டு தொடக்கத்தில் நிலை அறிக்கை தயாரிப்பதன் மூலம் தொடக்க முதலை அறியலாம்.
24. ஒரு நிலை அறிக்கை இருப்பு நிலை குறிப்பு போன்று தோற்றம் அளிக்கும்.
25. ஒற்றைப்பதிவு முறையில், ஆள்சார் மற்றும் ரொக்க கணக்குகள் மட்டுமே பராமரிக்கப்படும்.
26. பொறுப்புகளை விட கூடுதலாக உள்ள சொத்துகள் முதல் ஆகும்.
27. ஒற்றைப்பதிவு முறை என்பது ஒரு ஒழுங்கற்ற, தவறான, அறிவியல் தன்மையற்ற கணக்கேடுகள் பராமரிப்பு முறையாகும்.
28. முழுமை பெறாத பதிவேடுகளைப் பயன்படுத்தும் நிறுவனம் ----------சிறு வியாபாரிகள்.
29. கடன் விற்பனையை அறிய உதவும் கணக்கு ----------மொத்தக் கடனாளி கணக்கு.
30. கடன் கொள்முதலை அறிய உதவும் கணக்கு ----------மொத்தக் கடனீந்தோர் கணக்கு.
31. வியாபாரத்தின் முதலினை அறிய தயாரிக்கப்படுவது ---------- நிலை அறிக்கை.

32. நீண்ட காலத்திற்கு பயனளிக்கக் கூடிய சொத்துக்கள் நிலைச் சொத்துக்கள் எனப்படும்.
33. ஒரு சொத்தின் பயனளிப்புக் காலம் முடிந்த பிறகு,அதை விற்றால் கிடைக்கக் கூடிய தொகை இறுதி மதிப்பு / எறி மதிப்பு எனப்படும்.
34. சொத்தின் மொத்த அடக்கவிலை மீது தேய்மானம் கணக்கிடும் முறை நேர்க்கோட்டு முறை என அழைக்கப்படும்.
35. ஒவ்வொரு ஆண்டும், சொத்தின் ஏட்டுமதிப்பின் மீது தேய்மானம் கணக்கிடும் முறை குறைந்த செல் மதிப்பு முறை என அழைக்கப்படும்.
36. குத்தகைகள் மீது தேய்மானம் கணக்கிட ஆண்டு தொகை முறை பயன்படுத்தப்படுகிறது.
37. விடுகருவிகள் போன்ற சொத்துகள் தேய்மானம் நீக்க மறுமதிப்பீட்டு முறை பயன்படுத்தப்படுகின்றது. [ விடும(மா) ]
38. காப்பீட்டு முனைம முறையில் ஆண்டுதோறும் தேய்மானம் முனைமம் ஆகச் செலுத்தப்படுகின்றது.
39. தேய்மானம் ஏற்படுவது ---------- சொத்து தேய்வடைவதால்.
40. குறைந்த செல் மதிப்பு முறையில் தேய்மானம் ---------ஆண்டுதோறும் குறையும்.
41. வெறுமையாதல் என்ற சொல் தொடர்புடையது -------- இயற்கை கனிம வளங்கள்.
42. விற்பனை விலை சொத்தின் ஏட்டு மதிப்பை விட,அதிகமாக இருந்தால் அது இலாப இனம் ஆகும்.
43. விற்பனை விலை சொத்தின் ஏட்டு மதிப்பை விட,குறைவாக இருந்தால் அது நட்ட இனம் ஆகும்.
44. நிலைச் சொத்து விற்பதால் ஏற்படும் இலாபம் பற்று செய்யப்படும் கணக்கு--------நிலைச் சொத்து கணக்கு.
45. விகிதங்கள் நிதியியல் முன்கணிப்புக்கு உதவுகிறது.
46. நடப்பு சொத்துகள் எளிதாக ரொக்கமாக்கக் கூடியவை.
47. வங்கி மேல்வரைப்பற்று நடப்பு பொறுப்புக்கு ஒரு உதாரணம்.
48. நீர்மை விகிதங்கள் நிறுவனத்தின் குறுகிய நீர்மைத் தன்மையை அளவிட முடிகிறது.
49. துல்லிய நீர்மை விகிதம் என்பது நீர்மை விகிதத்திலிருந்து மாற்றியமைக்கப்பட்டதாகும்.
50. நீர்மைப்பொறுப்புகள் = நடப்பு பொறுப்புகள் ----வங்கி மேல்வரைப்பற்று.
51. சரக்கிருப்பு விற்பனை விகிதம் மொத்த சரக்கிருப்பு விற்பனை விகிதம் என்றும் அழைக்கப்படும்.
52. நீர்மை விகிதத்தை விரைவு விகிதம் / அமிலச் சோதனை விகிதம் எனவும் அழைக்கப்படும்.
53. அனைத்து வகையுடைமை விகிதங்களும் விகிதாச்சாரம் ஆகக் கொடுக்கப்படும். ( வ - வி )
54. அனைத்து செயல்பாட்டு விகிதங்களும் மடங்கு ஆகக் கொடுக்கப்படும். ( செ - ம )
55. அனைத்து இலாப விகிதங்களும் சதவீதம் ஆகக் கொடுக்கப்படும். ( இ - ச )
56. புலனாகும் சொத்துகள் = நிலம் + கட்டடம் + அறைகலன்.
57. இயக்க விகிதம் = 100 - இயக்க இலாப விகிதம்.
58. மொத்த இலாப விகித்தில் உள்ள உறவு முறை ------- மொத்த இலாபம் மற்றும் மொத்த விற்பனை.
59. ரொக்கத் திட்டப்பட்டியலில் உள்ள ரொக்கம் என்ற சொல் ரொக்கம் மற்றும் வங்கியிருப்பு ஆகியவற்றைக் குறிக்கின்றது.
60. ரொக்கத் திட்டப்பட்டியல் நிதிதிட்டப்பட்டியல் என்றும் அழைக்கப்படும்.
61. ரொக்கத் திட்டப்பட்டியல் தயாரிக்க மூன்று முறைகள் உள்ளன.
62. நிதித் திட்டமிடுதலுக்கு ஒரு பயனுள்ள கருவியாக ரொக்கத் திட்டப்பட்டியல் உள்ளது.

63. திட்டப்பட்டியல் என்பது எதிர் காலத்திற்கான மதிப்பீடு ஆகும்.
64. ரொக்கத் திட்டப்பட்டியல் வெளிப்படுத்துவது ---------- பணம் மற்றும் அலகுகளின் எண்ணிக்கை.
65. ரொக்கத் திட்டப்பட்டியலில் கையாள்வது --------- திட்டமிடப்பட்ட ரொக்க பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள்.
66. அறைகலன் வாங்கியது --------ரொக்க செலுத்தல்களுக்கு எடுத்துகாட்டாகும்.
67. தனியாள் வாணிகத்தில் உரிமையாளரும் மேலாண்மை செய்பவரும் ஒருவரே.
68. இந்தியக் கூட்டாண்மைச் சட்டம் உருவாக்கப்பட்ட ஆண்டு 1932.
69. கூட்டாண்மையின் மிக முக்கிய சிறப்பியல்பு பரஸ்பர உட்கிடை முகமை ஆகும்.
70. கூட்டாளிகளின் முதல் கணக்குகள் நிலை முதல் அல்லது மாறுபடும் முதலாக இருக்கும்.
71. நற்பெயர் ஒரு புலனாகா சொத்து.
72. சாதரண இலாபத்தை விட சராசரி இலாபம் மிகுதிக்கு உயர் இலாபம் என்று பெயர்.
73. கூட்டாண்மை உடன்பாடு இல்லாத நிலையில் _எடுப்புகள் மீது வட்டி விதிக்கக் கூடாது.
74. கூட்டாண்மையில் ஈடுபடும் ( அனைவரையும் ) நபர்களை ஒட்டு மொத்தமாக நிறுவனம் என அழைக்கலாம்.
75. தொழிலின் இலாப நட்டங்களை கூட்டாளிகளிடையே ஒப்புக் கொண்ட விகிதத்தில் பங்கிட்டுகொள்கின்றனர்.
76. கூட்டாண்மை நிறுவனத்தின் குறும எண்ணிக்கை ------- இரண்டு.
77. நிலைமுதல் முறையில், கூட்டாளிகளின் இலாப நட்டங்கள் அவர்களின் நடப்பு கணக்குகளுக்கு மாற்றப்படுகின்றது.
78. முதல் மீதான வட்டி கணக்கிடப்படுவது ------------ தொடக்க முதலில்.
79. கூட்டாண்மை உடன்பாடு இல்லாத பொழுது, கூட்டாளிகளுக்கு -------- ஊதியம் அளிக்கப்படாது.
80. நிலைமுதல் முறையில் , கூட்டாளிகளுக்கு கொடுக்கப்படும் ஊதியம் பதியப்படுவது ------- நடப்பு கணக்கில்.
81. ஒரு சொத்தின் மதிப்பு அதிகரிக்கும் பொழுது, அது இலாப இனமாகும்.
82. பதிவுறா பொறுப்பை ஏடுகளில் கொணர்வது நட்ட இனமாகும்.
83. பகிர்ந்து தரா இலாபம் இருப்புநிலை குறிப்பில் பொறுப்புகள் பக்கத்தில் தோன்றும்.
84. கூட்டாளி சேர்க்கையின் பொழுது, நற்பெயர் தோற்றுவிக்கப்படுகையில் பற்று செய்யப்படும் கணக்கு --------- நற்பெயர் கணக்கு.
85. பொறுப்புகளின் மதிப்பு குறைவது _இலாப இனமாகும்.
86. கூட்டாளிகளிடையே குறிப்பிட்ட ஒப்பந்தம் ஏதும் இல்லாத பொழுது, கூட்டாளியின் கடன் மீது ஆறு _சதவீதம் வட்டி வழங்கப்படும்.
87. புதிய இலாப பகிர்வு விகிதத்திலிருந்து பழைய இலாபப் பகிர்வு விகிதத்தை கழித்தால் கிடைப்பது ------ ஆதாய விகிதம்.
88. பழைய இலாப பகிர்வு விகிதம் --- புதிய இலாப பகிர்வு விகிதம் = தியாக விகிதம்.
89. புதிய கூட்டாளி சேர்க்கையில் தியாக விகிதம் கணக்கிடப்படுகிறது.
90. கூட்டாளி விலகும் பொழுது ஆதாய விகிதம் கணக்கிடப்படும்.
91. புதிய கூட்டாளி சேர்க்கையில்,பகிர்ந்து தரா இலாபமும், காப்பு நிதியும் பகிர்ந்து கொள்ளப்படுவது பழைய இலாப பகிர்வு விகித்ததில்.
92. விலகலின் பொழுது, தொழிலின் மறுமதிப்பீட்டு இலாபம்_அனைத்து கூட்டாளிகளாலும் பகிரப்படும்.

93. காப்பு முதல் நிறுமக் கலைத்தல் போது மட்டும் வெளியிடப்படும்.

94. பொது வெளியீடு அனுமதிக்கப்படும் குறைந்தபட்ச நாட்கள் ----------- 3 நாட்கள்.

95. பொது வெளியீடு அனுமதிக்கப்படும் அதிகபட்ச நாட்கள் ----------- 10 நாட்கள்.

96. ஒரு நிறுமத்தின், குறும ஒப்பமாக வெளியிடப்பட்ட முதலில் 90 சதவீதம் பெற்று இருக்க வேண்டும்.

97. எஞ்சிய விண்ணப்பத் தொகையில் ஒதுக்கீட்டிற்கு சரிகட்டிக் கொள்ளக்கூடிய ஒதுக்கீடு விகித அளவு அடிப்படை ஒதுக்கீடு ஆகும்.

98. இரு அழைப்புகளுக்கிடையே இருக்க வேண்டிய கால இடைவெளி ஒரு மாதம் ஆகும்.

99. முதலின காப்பு என்பது முதலின இலாபத்தை குறிக்கும்.

100. ஒறுப்பிழப்பு செய்த பங்குகளின் மறு வெளியீட்டு விலை முகமதிப்பை விட குறைவாக இருக்க வேண்டும்.

101. பத்திர முனைமம் இருப்புநிலைக் குறிப்பில் பொறுப்புகள் பக்கம் தோன்றும்.

102. முதலின காப்பு இருப்புநிலைக் குறிப்பில் பொறுப்புகள் பக்கம் தோன்றும்.

103. நிறுமமானது பங்குகளை முக மதிப்பு,முனைமம் மற்றும் தள்ளுபடியில் வெளியிடலாம்.

104. பொதுவாக நிறுமங்கள் பங்குகளை 10 % தள்ளுபடியில் வெளியிடலாம்.

105. பங்குகளை நிறுமம் ஒறுப்பிழப்பு செய்யும்போது, அந்நிறுமத்தின் பங்குமுதல் குறையும்.

106. ஒரு நிறுமத்தின் பங்கு வெளியீட்டு விலை முகமதிப்பிற்கு அதிகமாக வெளியீடு செய்தால் முனைமத்தில் வெளியிடல் எனப்படும்.

* குறைவாக வெளியீடு செய்தால் தள்ளுபடியில் வெளியிடல் எனப்படும்

107. வெளியிடப்பட்ட பங்குகளின் எண்ணிக்கையைவிடக் கூடுதலாக விண்ணப்பங்கள் பொது மக்களிடமிருந்து பெறப்பட்டால் அதனை மிகை ஒப்பம் என்று அழைக்கப்படுகின்றது.

* குறைவாக விண்ணப்பங்கள் பொது மக்களிடமிருந்து பெறப்பட்டால் அதனை குறை ஒப்பம் என்று அழைக்கப்படுகின்றது.

108. அட்டவணை A யின் படி, அழைப்பு நிலுவைக்கு கணக்கிடப்படும் வட்டி 5 % ஆகும்.

109. அட்டவணை A யின் படி, அழைப்பு முன்பணத்திற்கு செலுத்திடும் வட்டி 6 % ஆகும்.

110. ஒரு நிறுமம் வெளியிடும் அதிகபட்ச அழைப்புகளின் எண்ணிக்கை மூன்றாகும்.

111. இ.ப.வா ( SEBI )இன் கூற்றுப்படி, விண்ணப்பத்தின் போது குறைந்தபட்சம் வசூலிக்கும் தொகை வெளியீட்டு விலையில் 25 % ஆகும்.

B. பாலாஜி,
முதுகலை ஆசிரியர் ( வணிகவியல் ),
அரசினர் மேல்நிலைப் பள்ளி,
பரந்தூர் - 631 552.
காஞ்சிபுரம் மாவட்டம்.
கைபேசி எண் :9629647613